ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 26 ] [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 7

Total No. of Questions : 26 ] [ Total No. of Printed Pages : 7

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 452-T (RS)**

**Code No. : 452-T (RS)**

# ಡಿ.ಎಲ್.ಎಡ್. ದ್ವಿತೀಯ ವರ್ಷ

# D.El.Ed. SECOND YEAR

# ಕಲಿಕೆಯನು-ಅನುಕೂಲಿಸುವುದು (ಹಿ.ಪ್ರಾ.ಶಾ.)

# ಪ್ರಥಮ ಭಾಷೆ – ತಮಿಳು

# FACILITATING LEARNING ( HPS )

# FIRST LANGUAGE — TAMIL

(ಪರಿಷ್ಕೃತ ಪಠ್ಯವಸ್ತು)

**(Revised Syllabus)**

ದಿನಾಂಕ : 10. 12. 2018 ]

Date : 10. 12. 2018 ]

ಸಮಯ : ಮಧ್ಯಾಹ–2.00 ರಿಂದ 5.00 ರವರೆಗೆ ] [ ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 60

Time : 2.00 P.M. to 5.00 P.M. ] [ Max. Marks : 60

*ಅಭ್ಯರ್ಥಿಯ ನೋಂದಣಿ ಸಂಖ್ಯೆ*

*Register Number of the Candidate*

***குறிப்பு :***

i) இது 60 மதிப்பெண்களின் வினாத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் சிந்தித்து பதிலளிக்க வேண்டும். இதற்காக 3 மணி நேரங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

iii) ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையளிக்கவும்.

## PART – I

I. இப்பகுதியில் மொத்தம் 10 வினாக்கள் இருக்கின்றன. **எல்லா** வினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. அதில் ஏதாவது ஒரு விடை சரியானதாக இருக்கும். அதைத் தேர்ந்தெடுத்து எழுதவும். $10 \times 1 = 10$

1. வகுப்பறையில் நூலகம் அமைக்கப்படுவது : ................................ .

(அ) ஒருங்கிணைப்பதற்கு

(ஆ) அழகு சேர்ப்பதற்கு

(இ) தெரியாததை தெரிந்து கொள்வதற்கு.

2. பள்ளியில் சேரும் மாணவர்களுக்கு பயிற்றும் மொழி ........................................ இருக்க வேண்டும்.

(அ) தாய்மொழியாக

(ஆ) பிறமொழியாக

(இ) தேசிய மொழியாக

3. ஆசிரியர் குழந்தைகளிடம் பேசும் பேச்சு ........................................ அமைய வேண்டும்.

(அ) கடினமாக

(ஆ) சரளமாக

(இ) எளிமையாக.

4. முதன்முறையாக பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு தெரிந்திருக்கும் சொற்கள் ........................... .

(அ) 3500

(ஆ) 2500

(இ) 4500

5. மொழியின் வளர்ச்சி .................................... .

(அ) அரசினரால்

(ஆ) மக்களால்

(இ) தனி ஒருவரால்.

6. வகுப்பறையில் குழந்தைகளுக்கு புத்தகம் கொடுப்பது .................................... .

(அ) படிப்பதற்கு

(ஆ) விளையாடுவதற்கு

(இ) சித்திரம் வரைவதற்கு

7. நாட்டின் ஆணிவேர் என்று சொல்லப்படுபவர்கள் ....................................

(அ) மக்கள்

(ஆ) மாணவர்கள்

(இ) தேவர்கள்

8. இலக்கியம் படிப்பதால் .................................... ஏற்படும்.

(அ) உற்சாகம்

(ஆ) அறிவு வளர்ச்சி

(இ) மன அமைதி.

9. குழுக்களில் உள்ள மாணவர்கள் .................................... உட்கார வேண்டும்.

(அ) வளைந்து

(ஆ) நெருக்கமாக

(இ) வட்டமாக.

10. காது கேளாத மாணவர்களுக்கு .................................... விளக்கவேண்டும்.

(அ) உரக்கப் படித்து

(ஆ) படங்களைக் காண்பித்து

(இ) பெரியதாக எழுதுவதன் மூலம்.

## PART – II

II. எவையேனும் **ஐந்து** (5) வினாக்களுக்கு மட்டும் விடை தருக : 5 × 2 = 10

11. மானவர்களின் திறமையை புரிந்து கொள்வது எவ்வாறு ?

12. குறிப்பு எழுதுவதன் நோக்கம் என்ன ?

13. கேட்டல் முறையில் மாணவர்களிடையே இருக்க வேண்டிய குணங்கள் யாவை ?

14. குழுக்களின் விவாதம் எவ்வாறு நடைபெற வேண்டும் ?

15. கதை சொல்லும் போது, கதையின் முடிவில் என்ன நடக்கும் என்பதை தெரிந்து கொள்ளும் முறை யாது ?

16. வகுப்பறையில் நூலகம் அமைப்பது ஏன் ?

17. எழுதுவதைப் பற்றி என்-சி-டி-இன் நம்பிக்கை என்ன ?

18. படிப்பில் கவனம் செலுத்துபவர்கள் யார் ?

## PART – III

III. இப்பகுதியில் மொத்தம் **எட்டு** வினாக்கள் உள்ளன. ஒவ்வொரு வினாவிலும் மாற்று வினாக்கள் (அ) அல்லது (ஆ) தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஏதாவது ஒன்றிற்கு மட்டும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கான விடையும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். $8 \times 5 = 40$

19. அ) மொழி பயிற்றும் முறையில் வீட்டிலும் மற்றும் வகுப்பறைகளிலும் எவ்வாறு நடை பெற வேண்டும் ?

*அல்லது*

ஆ) மொழி பயிற்றும் ஆசிரியர்களுக்கு அமைய வேண்டிய குணங்கள் யாவை ?

20. அ) குழந்தைகள் வீட்டில் பேசப்படும் மொழியி ருந்து பள்ளியில் பயிலும் மொழிக்கு மிகுந்த வேறுபாடு உண்டு. எவ்வாறு ?

*அல்லது*

ஆ) செய்யுட்களை படிப்பதா அல்லது பாடுவதா என்பதற்குரிய சந்தேகம் ஆசிரியர்களுக்கு. அவற்றைப் பற்றி விளக்குக.

21. அ) மொழிப் பாடத்தில் எவ்வாறு தேர்வு செய்வீர் ?

*அல்லது*

ஆ) படித்தல் திறனின் குறிக்கோள்கள் பற்றி எழுதுக.

22. அ) பல்வேறு மொழிகளைப் பேசிவரும் குழந்தைகளுக்கு எவ்வாறு பயிற்று மொழியை கற்பிப்பீர் ?

*அல்லது*

ஆ) கேட்டல் திறனை வளர்ப்பதற்கு எவ்வித முயற்சியை மேற்கொள்வீர் ?

23. அ) மொழி பயிற்றுவிப்பதின் நோக்கம் என்ன ?

*அல்லது*

ஆ) கேட்டல் திறனில் குழந்தைகளை எவ்வாறு மதிப்பீடு செய்வீர் ?

24. அ) மொழியை குழந்தைகள் எவ்வாறு வளர்த்துக் கொள்கிறார்கள் ?

*அல்லது*

ஆ) வகுப்பறையில் மொழியை எவ்வாறு வளர்ப்பீர் ?

25. அ) இலக்கியத்தின் தன்மைகளை மாணவர்களுக்கு எவ்வாறு உணர்த்துவீர் ?

*அல்லது*

ஆ) தமிழ் இலக்கியத்தை எத்தனை வகையாகப் பிரிக்கலாம் ?

26. அ) மொழி பயிற்றும் முறையில் உள்ள விதிமுறைகள் யாவை ?

*அல்லது*

ஆ) படித்தல் திறன்களை வளர்ப்பதற்கு நவீன முறையை எவ்வாறு கையாள்வீர் ?